No.C.03/2022 25-02-2022

# அகில உலகப் பெண்கள் நாள்
# 08 மார்ச் 2022

**அன்பிற்கினிய சகோதரிகளே, சகோதரர்களே,**

உலகெங்கும் மார்ச் 8ஆம் நாள் அகில உலகப் பெண்கள் நாளாகக் கொண்டாடப்படுகிறது. சமகூலி, ஊதிய உயர்வு, ஓய்வு நேரம், சுகாதார வசதிகள் போன்ற பல்வேறு உரிமைகளுக்காகப் பெண்கள் வீரமுடன் போராடி வெற்றி பெற்றதை இந்நாள் நமக்கு நினைவுபடுத்துகிறது. திருஅவையும் இந்நாளின் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்ந்து சிறப்பிக்கின்றது. கோட்டாறு மறைமாவட்டத்தில் மார்ச் மாதம் 6ஆம் நாள் ஞாயிறன்று இந்த எனது சுற்றுமடல் வாசிக்கப்பட்டு, மார்ச் 13ஆம் நாள் ஞாயிறு நமது பங்குகளில் கொண்டாடப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதோடு பெண்கள் நாளின் சிறப்பு வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## இணைந்து பயணிக்கும் திருஅவை

இணைந்து பயணிக்கும் திருஅவையாக நம் திருஅவை வளர்வதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், தமிழக ஆயர் பேரவையின் பெண்கள் பணிக்குழு ''திருஅவையும் பெண்களின் பங்கேற்பும்'' என்ற தலைப்பில் நம்மைச் சிந்திக்கவும் பெண்கள் நாள் சிறப்புத் திருப்பலியைக் கொண்டாடவும் அழைப்பு விடுக்கிறது.

நமது குடும்பங்களிலும் சமூகத்திலும் நம்மோடு இணைந்து பயணிக்கும் பெண்களை, திருஅவையிலும் உடன் பயணிக்கும் தோழர்களாக ஏற்றுக்கொள்ளப் பெரும்பாலும் நாம் முன்வருவதில்லை. அவர்களுக்கு உரிய மதிப்பு கொடுக்கவும், முன்சார்பு எண்ணமின்றி திறந்த மனதோடு அவர்களுக்குச் செவிமடுக்கவும் நாம் தயங்குகிறோம். திருஅவையின் இயக்கத்தில் தங்களது பங்களிப்பைத் தாராளமாகக் கொடுத்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு, முடிவெடுக்கும் நிர்வாக அமைப்புகளில் பொறுப்புகளைக் கொடுக்க முன்வராத பங்குகள் நம் மறைமாவட்டத் திருஅவையில் இன்னும் நீடிப்பது மிகுந்த கவலை அளிக்கிறது. பெண்களைத் தலைமைப் பொறுப்புகளில் அமர்த்துவதில் தயக்க நிலை நீடித்தாலும் பல பங்குகளின் நிர்வாக அமைப்புகளில் பெண்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும் அவர்கள் சிறப்பாகச் செயல்படுவதும் பாராட்டுதலுக்குரியதே.

## இறையாட்சிப் பணியில் பெண்கள்

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தாம் தொடங்கிய இறையாட்சிப்பணியில் இயேசு பெண்களையும் இணைத்துக்கொண்டார் என்பதை லூக்கா நற்செய்தியாளர் பதிவு செய்திருக்கிறார் (லூக் 8:1-3). அன்றைய யூத சமூகத்தில் பெண்கள் ஆண்களோடு பொது இடங்களில் பேசக்கூட அனுமதி இல்லை என்றிருந்த நிலையில் அதற்கு மாறாக இயேசு பெண்களை மதிப்போடு நடத்தும் கலாச்சாரத்தைப் பரப்பினார்.

எடுத்துக்காட்டாக, பெண்களைத் தீர்ப்பிடாமல் அவர்களிடம் கனிவோடு நடந்து கொண்டார்; நலிவுற்ற பெண்ணினத்தின் சார்பாக நின்றார்; சமாரியப் பெண் (யோவா 4), பரிசேயர் சீமோன் வழங்கிய விருந்து வீட்டில் இயேசுவின் கால்களில் நறுமணத் தைலம் ஊற்றிய பெண் (மத் 26:6-13), விபசாரத்தில் பிடிப்பட்ட பெண் (யோவா 8:1-8) ஆகிய பெண்களின் செயல்களைப் பாராட்டி அங்கீகரித்தார். இவையெல்லாம் திருஅவையில் பெண்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதற்கு இயேசு கற்றுத்தந்த வாழ்க்கைப் பாடங்கள் ஆகும். இயேசுவின் சீடர்களாகிய நாமும் நம்முடைய செயல்பாடுகளில், இயேசுவிடமிருந்த ஆண்-பெண் சமத்துவ மனநிலையைப் பிரதிபலித்துச் செயலாற்ற வேண்டும்.

## கோட்டாறு மறைமாவட்டப் பெண்கள் பணிக்குழு

நமது கோட்டாறு மறைமாவட்டம் இயேசுவின் இறையாட்சிப் பணியை முன்னெடுத்துச் செல்வதில் பெண்களின் பங்கேற்பும் முழுமையாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் 1989ஆம் ஆண்டு பெண்கள் பணிக்குழுவை உருவாக்கியது. தனிமனித, சமூக, அரசியல், பொருளாதார, சமய, கலாச்சார அடிப்படையில் பெண்களை ஆற்றல்படுத்தி ஒத்த கருத்துள்ள இயக்கங்களோடு இணைந்து துணிச்சலுடன் செயல்பட்டு வரும் பெண்கள் பணிக்குழுவை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். இப்பணியில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை அனைத்து நேச இயக்கங்களோடு ஒருங்கிணைத்துச் செயலாற்றி வெற்றி பெறவும் வாழ்த்துகின்றேன். அவ்வகையில், மார்ச் 8ஆம் நாள் குமரி மாவட்டப் பெண்களின் கூட்டுக்குழு அழகியமண்டபம் அன்னை ஆதா பயிற்சி அரங்கத்தில் நடத்தும் பொதுக்கூட்டத்தில் நமது பெண்கள் கலந்து பயன்பெற வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

## அச்சமும் அதிர்ச்சியும்

பெண்களுக்குப் பாதுகாப்பே இல்லாத இக்காலச்சூழல் மக்களை மிகுந்த அச்சத்தில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது. பள்ளிப்பருவ மாணவிகள் கூட பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாவதும், கொலை செய்யப்படுவதும், தற்கொலைக்குத் தள்ளப்படுவதும் அதிகரித்து வருவது ஆபத்தான எதிர்காலத்தையே முன்னறிவிக்கின்றன. பெண்கள் வாழ இதமான சூழல் இல்லாத காரணத்தால் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் கடும் சரிவைக் கண்டுள்ளது. தமிழகத்தில் 2020-21ஆம் ஆண்டில் 1000 ஆண்களுக்கு 878 பெண்கள் மட்டுமே இருக்கிறார்கள் என்ற விகிதாச்சாரம் மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அறிவொளி மிகுந்த தமிழகத்திலேயே இந்நிலை என்றால் பிற மாநிலங்கள் எந்நிலைமையிலிருக்கும் என நம்மால் ஊகிக்க முடிகிறது. இந்நிலை நீடித்தால் வருங்கால சமூகத்தில் பெண்களின் வாழ்வு எப்படி இருக்குமோ என்ற கவலையையும் உண்டாக்கியிருக்கிறது.

## விழித்தெழுக!

எனவே, திருஅவையும் சமூகமும் விழித்துக்கொள்ள வேண்டிய காலம் இது. பெண்களின் போராட்ட உணர்வை மழுங்கடிக்காமல், உற்சாகப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். திருஅவை மற்றும் சமூகத்தின் பிரச்சினைகளுக்காகப் பெண்களை முன்னிறுத்திப் போராடுகின்ற நாம், பெண்

விடுதலைக்காகவும் போராட அவர்களை ஊக்குவிக்க வேண்டும். பெண்களின் போராட்டங்களைக் கொச்சைப்படுத்தாமல் உரிய மதிப்பளிக்க வேண்டும். அண்மையில் கர்நாடக மாநிலத்தில் ஹிஜாப் என்ற துயிலால் தனது உடலை மறைத்துக் கொண்டுவந்த மாணவி, தன்னை வழிமறித்த மதவெறிக் கும்பலை அச்சமின்றித் துணிச்சலோடு எதிர்க்கொண்ட காட்சியை ஒரு காலத்தின் அறிகுறியாகப் பார்க்க வேண்டும். அநீதியை எதிர்கொண்டு கண்டிப்பதில் நமது பெண்களுக்கும் சமூகத்திற்கும் அறச்சினம் உருவாக வேண்டும்.

## பங்குகளில் பெண்கள் குழுக்கள்

நமது மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளிலும் இந்த ஆண்டு இறுதிக்குள் பெண்கள் பணிக்குழுவை உருவாக்க வேண்டும் என்பதை நமது இலக்காகக் கொள்ளக் கேட்டுக்கொள்கின்றேன். பெண்களின் ஆற்றல் ஒருங்கிணைய, பங்கு அருள்பணியாளர்கள் பங்கு அருள்பணிப் பேரவையினர் அனைவரும் பெண்கள் பணிக்குழுவுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என அன்போடு கேட்கின்றேன்.

திருஅவையின் பெண் பொதுநிலையினர் தங்களை ஆற்றல்படுத்திக்கொண்டு, திருஅவையில் பங்கேற்றுத் தங்கள் பங்களிப்பைத் திருஅவை மற்றும் சமூக முன்னேற்றத்துக்காக வழங்கிட வேண்டுமென ஆசிக்கின்றேன். திருஅவையில் முடிவெடுக்கும் எல்லா அமைப்புகளிலும் திறமை வாய்ந்த பெண்கள் பங்கேற்று, திருஅவையைச் செழுமைப்படுத்துவார்கள் என நம்புகின்றேன்.

அதற்குப் பெண்கள் பணிக்குழு தனது பணியை இன்னும் தீவிரப்படுத்திடவும் நன்கு திட்டமிட்டு இறையாட்சிப் பணியில் முன்னேறவும் வாழ்த்துகின்றேன்.

எலிசபெத்தைச் சந்தித்தபோது ஆண்டவரைப் போற்றிப் புகழ்ந்து ஒரு புரட்சி சமுதாயத்திற்கு உரமிட்ட அன்னை மரியா (லூக் 1:46-56) நமது பெண்களின் நன்முயற்சிகளில் என்றும் உடனிருப்பாராக.

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

**+ ஆயர் நசரேன் சூசை**

கோட்டாறு மறைமாவட்டம்

---

குறிப்பு

1. இச்சுற்றுமடல் 06-03-2022 ஞாயிறன்று எல்லா ஆலயங்களிலும் வாசிக்கப்பட வேண்டும். 13-03-2022 ஞாயிறு பெண்கள் நாளாகச் சிறப்பிக்கப்பட வேண்டும்.
2. தமிழக ஆயர் பேரவையின் பெண்கள் பணிக்குழு தயாரித்து வழங்கியுள்ள திருவழிபாட்டுக் குறிப்புகள் மற்றும் சுவரொட்டியை நமது ஆயலங்களிலும் பயன்படுத்தலாம்.